டாக்டர் எச். வி. ஹாண்டே : மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது ; இல்லை யென்று சொல்லவில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து ஆக வேண்டும். இதுவரையிலே அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது குறித்து அம்மையார் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள், நான் விளக்கம் தரத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த விளக்கமே நல்ல விளக்கமாக அமைந்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப்பேரவை 50-வது விதியில் 6-வது பிரிவில் " The motion shall not raise a question of privilege " என்று இருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி பேசப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டு தீர்ப்புக் கொடுக்கப்பட்டாகிவிட்டது, உட்காருங்கள்.

அடுத்து, திரு. லத்தீப் அவர்களும் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) கௌரவ மாநகர மாஜிஸ்ட்ரேட் நியமன முறையை மாநில அரசு எடுத்து விடுவது குறித்து

THIRU M. A. LATHEEF : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the decision of the State Government to abolish the system of Honorary Presidency Magistrates from 1st April 1974 as a result of the recent Central Government's order and the need to continue the practice of appointing Honorary Magistrates.

1974 ஏப்ரல் 17]

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the decision of the State Government to abolish the system of Honorary Presidency Magistrates from 1st April 1974 as a result of the recent Central Government's order and the need to continue the practice of appointing Honorary Magistrates.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகளை நியமனம் செய்யவும் சென்னை மாநகருக்கு வெளியே மாவட்டங்களில் தனி மாஜிஸ்டிரேட்டுகளை—இவர்கள் எந்த தரத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்—நியமிக்க 1898-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அதாவது, தற்போதுள்ள கி.பு.கோ.) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. இவர்கள் ஊதியம் பெருத மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பின் நேர்வுக்கேற்ப, கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் அல்லது கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் என அழைக்கப்படுகின்றனர். சென்னை மாநகரிலும் வெளி மாவட்டங்களிலும் மாஜிஸ்டிரேட் ஆயங்களை (Benches of Magistrates) அமைக்கவும் மேற்படி விதிக்கோவை அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட் நியமனத்திற்கு குறிப்பிட்ட தகுதி எதுவும் தற்போதைய விதிக்கோவையில் வரையறுக்கப்படவில்லை. ஆனால், தகுந்த நிலையிலுள்ளவர்களும் கல்வித் தகுதியுடையவர்களும் சட்டங்களின் பொருளுணர்ந்து இரு தரப்பினரிடையேயுள்ள வழக்கைப் புரிந்து கொண்டு முடிவு செய்யக் கூடியவர்கள் தான் இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமனம் பெற ஒருவர் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது, கல்வித் தகுதிகளையும் ஏனைய தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் அரசு ஊழியராகவோ பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியராகவோ இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அவர் அரசுச் சார்பற்றவராகவும் இருக்கலாம்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1974) 1898-ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பதிலாகச் செயலுக்கு வரும். தனி மாஜிஸ்டிரேட்டுகள் நியமனம் குறித்து புதிய சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மாஜிஸ்டிரேட்டு ஆயங்கள் எடுத்துவிடப்பட்டுள்ளன. ஆயினும், மாநகரில்

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 17

மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகளையும் வெளியூர்களில் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளையும் நியமனம் செய்ய அரசுக்கு உரிமையுண்டு. ஆனால், தற்போது பணியிலுள்ள அரசு ஊழியர்கள் அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் ஆகியோர் மட்டுமே இந்த நியமனம் பெறத் தகுதியுடையோராவர். மேலும் அவர்கள் உயர்நீதிமன்றம் விதிகள் பிறப்பித்து நிச்சயிக்கக்கூடிய சட்டக் கல்வித் தகுதியை அல்லது சட்ட விவகாரங்கள் குறித்த அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசு அல்லது மாநில அரசு வேண்டுகோள் விடுத்தால், உயர்நீதிமன்றம், நிர்ணயிக்கப்பட்ட தகுதியுடையோருக்கு அத்தகைய மாஜிஸ்டிரேட் அதிகாரங்களை வழங்கும்.

தற்போதைய சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கௌரவ தனி மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், தனி மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோர் பதவியிலிருப்பது 1—4—1974 அன்று அற்றுப் போகும். புதிய அமைப்பின் கீழ் மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகள், நீதித் துறை தனி மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோரின் நியமனத்திற்கான தகுதிகளை வரையறுக்க உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத் துள்ளது. இப்பொழுது தேவைப்படக்கூடிய அளவுக்கு விதிகளின் கீழ் தகுதியுடையோருக்கு மாநகர தனி மாஜிஸ்டி ரேட்டுகள் அல்லது நீதித்துறை தனி மாஜிஸ்டிரேட்டுகளின் அதிகாரங்களை வழங்குமாறு அரசு உயர்நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளும்.

மாஜிஸ்டிரேட்டு ஆயங்களை அமைப்பதற்கான அதிகாரம் புதிய சட்டத்தினால் எடுத்துவிடப்பட்டதே தவிர, கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், கௌரவ தனி மாஜிஸ்டிரேட்டுகள் எனப்படும் பதவிகளை எடுத்து விடவில்லை என்பது நான் கூறிய வற்றிலிருந்து தெளிவாகும். மாறாக, இவ்விரு பதவிகளும் புதிய அமைப்பிலும் தொடர்ந்து இருந்து வரும். பணியிலுள்ள அரசு ஊழியர்கள் அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர் கள் மட்டுமே இப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டு மென்பதும், நியமனம் செய்யப்பெற விழைபவர்கள் உயர்நீதி மன்றம் வரையறுக்கக் கூடிய சட்டக் கல்வித் தகுதி அல்லது சட்ட விவகாரங்களில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இந்த நியமனம் குறித்து செய்யப்பட்டுள்ள மாற்றங்களாகும்.

1974 ஏப்ரல் 17]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் என்பது மாநில அரசினுடைய பொறுப்பாகும். இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிற முறைப்படி, சமீபத்திலே பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே, கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் எல்லாம் 1—4—1974 லிருந்து அவர்களுடைய பதவிகளை இழந்துவிடுவார்கள் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடியவர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறவர்கள். அதே நேரத்திலே அரசுத் துறையிலே வேலை செய்தவர்கள், அரசுத் துறையிலே வேலை செய்து பணியாற்றியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பதவிக்குப் போதிய அளவிற்குச் சட்டத் துறையிலே நீதி நிர்வாகத்திலே கல்வி வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை.

ஆனால், சிலர் சமுதாயத்திலே அவர்களுக்கு இருக்கின்ற கௌரவத்தின் காரணமாக மக்களுடைய பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, மக்களால் மதிக்கப்படுகிறவர்களாக அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டு வந்தார்கள். மக்கள் தங்களுக்குத் தாங்களே நீதி வழங்கிக் கொள்கின்ற முறை இருக்கிறது என்ற நல்ல எண்ணம் இருந்தது.

அவர்கள் 'பெட்டி கேஸஸ்' என்று சொல்லப்படுகின்றவைகளைத்தான் நடத்தி வந்தார்கள். அதற்கு அதிகமான சட்டப் பயிற்சி தேவையில்லை. பாராளுமன்றத்திலே அப்படி ஒரு சட்டத்தை அவர்கள் நிறைவேற்றியிருந்தாலும்கூட மகாராட்டிரத்திலே நீதி நிர்வாகம் மாநிலத்தின் பொறுப்பிலே உள்ளது என்று கூறி, இப்பொழுது அவர்கள் 'override the effects of the Act of Parliament' என்ற முறையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள், அதைப் போலவே நாமும் நம்முடைய தனித்தன்மையைக் காட்டுவதற்காக சுதந்திர உணர்ச்சியைக் காட்டுவதற்காக அதுபோன்ற சட்டத்தைக் கொண்டுவந்து ஏன் நிறைவேற்றக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கருத்தை இந்த அரசு பரிசீலித்து ஊர் நீதி மன்றம் என்ற முறையிலே ஒரு மசோதாவைத் தயாரித்தோம். அதற்கு வழக்கறிஞர், நீதிமன்றங்கள் ஆகியவர்களிடமிருந்து எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே அதை ஆராய்ந்து பரிசீலிக்கலாம்.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister whether it is the policy of the Government to do away partly with the appointment of Honorary Magistrates? Is it for that purpose they are waiting for the amendment of the Central Government? I think under that coverage they want to take a decision. I want to know the exact position with regard to the Honorary Magistrates or whether there is any proposal to suggest alternative amendment to the Central Act because it is in the concurrent list or whether there is any proposal to continue the present system. What is the exact policy of the Government? What has prompted the Government to wait for the amendment of the Centre? I want to know whether any malpractices in the procedure has been noticed. I want to know the thinking and mind of the Government. The Hon. Minister can take the House into confidence and share the views of the Members.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, this is not the policy of this Government. It is the policy of the Government of India to incorporate this in the Central Act. If the hon. Member supports the Resolution which we are discussing now fully wholeheartedly and co-operatively, the State Government will get the power to amend the Act.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மகாராஷ்டிரா அரசாங்கத்திலே திருத்தியிருக்கிறார்கள். எனவே, நீங்களும் அப்படித் திருத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. 'ஆனரரி மாஜிஸ்ட்ரேட்' வேண்டாமென்று இருந்தால் அது வேறு விஷயம். விரும்பினால் திருத்த முடியும். Why should the Hon. Minister recoil himself into the shell? He can say what exactly is his point. உங்கள் பாலிசி என்ன?

THE HON. THIRU S. MADHAVAN : We will always put our policy without any fear from any body else. But the hon. Member should not give a wrong impression to this House that

Maharashtra has passed the Bill. They only introduced the Bill. They are waiting for the consent of the Centre. We have already brought our resolution. The hon. Member must support the resolution. In the resolution we have mentioned that without waiting for the consent of the President we must be given the power to bring the Bill. That is the request in our resolution. If the hon. Member supports the resolution, we will consider it.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. The Hon. Minister is giving a wrong impression that the Centre is withholding their consent. But so far as I understand, I do not think for any bills we have passed, consent has been withheld by the Centre. Maharashtra is waiting for consent. But what are you doing? Are you not going to send it for concurrence? இனிமேல் அனுப்ப மாட்டீர்களா? 'கன்கரன்ஸ்' கொடுக்கிறார்களா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்காக அனுப்ப மாட்டீர்களா? How do you escape from that? இதுவரையில் அனுப்பவில்லையா? பாலிசியைச் சொல்வதற்கு என் பயப்படுகிறீர்கள்?

THE HON. THIRU S. MADHAVAN : There is no question of fear in introducing the Bill. It is a recent Bill which originated in Parliament. Even earlier we expected it. But only in January they passed it. They have implemented the Bill from 1st April 1974. Maharashtra has framed the Bill. So far as information available to us is concerned, consent has been refused. Whether it is correct or not, I shall have to verify. Recently Criminal Procedure Code has been amended by the Government of India. If we have to amend the Act, it has to be considered in detail. Let the hon. Member support our resolution. Then we will get the power and we will implement the suggestion.

THIRU M. A. LATHEEF : An impression is sought to be created here that Maharashtra has already drafted the Bill giving effect to Central Amendment Act and that those changes are pending for concurrence of President. What I want to say is this. In so far as administration of justice is concerned, it is the responsibility, exclusive responsibility of the State Government. The President is constitutionally bound to give his assent. So saying that President is withholding consent, etc., does not carry any value. What we feel is that this healthy institution has

served its social utility and it has stood the test of time beyond reasonable doubt. Therefore we would like the Government very much to retain that system as it is. That is our request.

THE HON. THIRU S. MADHAVAN : I agree with the interpretation of the hon. Member about constitutional provision for getting consent of the President. Of course, he is supporting our resolution. I am glad. We have already told that we are setting up ஊர் நீதிமன்றம் which incorporates this suggestion. We will soon take it up for consideration.

(ஆ) கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்திரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்படுவது குறித்து.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் :—

"கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்தரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்பட்டு விடுவதால், இதை உடனடியாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பது பற்றி".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இதைப்பற்றி என்னுடைய அறிக்கை@ பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையில் ஒன்றும் நமக்கு சாதகமாகப் பதில் இல்லை. இதே தீர்மானத்தை நான் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே கொண்டு வந்தேன். சென்ற ஆண்டு இந்த ரிசர்ச் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை இங்கே யாரும் உணர்ந்ததாகவே தெரியவில்லை. கொஞ்ச நாளிலே தமிழகத்திலே சோற்றுக்கு

@ 399-402-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS